Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 09, 2023

வெள்ளிக்கிழமை ஜூன் 08, 2023 | ஒளி: 09 கதிர்: 015 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE



# 2,479
## பேருக்கு டெங்கு

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் 2,479 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளதுடன், கம்பஹா மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 41, 883 ஆக உயர்வடைந்துள்ளது.

தொடர்ச்சி P2




வைத்தியர் முகைதீன் கொலை

## ‘புளொட்’ நெடுமாறனுக்கு மரண தண்டனை

■ க. அகரன்

வவுனியாவில் மகப்பேற்று விசேட வைத்தியர் முகைதீனை சுட்டுப் படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வவுனியாவை சேர்ந்த நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்ற நபரை குற்றவாளியாக இனங்கண்ட வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2

# தமிழர் எவ்வாறு நம்புவர்?

இன நல்லிணக்கம் தொடர்பில் ஒருபுறம் கதைத்து விட்டு, பிறிதொரு புறம் தமிழ்ப் பிரதிநிதிக்கு எதிராகச் செயற்படும் போது தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்வார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹரிணி அமரசூரிய கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட கேள்வியை அவர் எழுப்பினார்.



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அவர் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன? இன நல்லிணக்கம் தொடர்பில் ஒருபுறம் கதைத்து விட்டு, பிறிதொரு புறம் தமிழ் பிரதிநிதிக்கு எதிராக செயற்படும் போது, தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்வார்கள்?

குற்றமிழைப்பவர்களை சமமாக நடத்த வேண்டும். பாராளுமன்றத்தில் இந்த வித்தியாசத்தை அவதானித்தோம். ஆளும் தரப்புக்கு ஒரு சலுகையும் எதிர்க்கட்சிக்கு பிறிதொரு சலுகையும் அரசாங்கம் மனம்போன போக்கில் செயற்படுகிறது” என்றார்.



## “பிடியாணை இன்றியே பிடித்துச் சென்றனர்”

### கைதுக்கான ரசீதும் தரவில்லை என்கிறார் கஜேந்திரகுமார்

நீதிமன்ற பிடியாணை எதுவுமின்றி தன்னைக் கைது செய்த பொலிஸார், தன்னைக் கைது செய்ததற்கான ரசீதையும் தனது குடும்பத்துக்கு வழங்க மறுத்து விட்டனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் தன்னைப்பற்றி ஊடகங்களுக்கு பல தவறான அறிக்கைகளை அளித்து வருகிறார் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2




## புதிய விதத்தில் விளக்கம்

■ க.அகரன்

விசேட தேவையுடையோருக்கு புதிய முறையில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான தெளிவை ஏற்படுத்தும் செயற்றிட்டம் வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் ‘விஸ் அபிலிட்டி’ என்ற அமைப்பின் ஊடாக இந்தத் தெளிவுபடுத்தல் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## நிதிக்குழு தலைவரை நியமிக்க ஜனாதிபதி வரவேண்டுமோ?

அரசாங்க நிதிக்குழுவின் தலைவரை நிறைவேற்று ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்து நியமிக்க வேண்டுமானால் சபாநாயகருக்கு அந்த அதிகாரம் இல்லையா என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) விசேட கூற்றொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றிய பின்னர் மேற்குறிப்பிட்ட கேள்வியை கிரியெல்ல எம்.பி எழுப்பினார்.

முன்னர் உரையாற்றிய சஜித் தெரிவிக்கையில், “காலம் தாழ்த்தியாவது அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் பதவியை ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கியமை தொடர்பில் நன்றி தெரிவிக்கிறோம். இருந்தபோதும் அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் பதவியை அதற்குத் தகுதியான ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குமாறு நாங்கள் தொடர்ந்து கோரிக்கை

தொடர்ச்சி P2

வடக்கு ஆசிரியர் நியமனம்

## சிக்கல்தான்; எதுவும் செய்ய முடியாது

2019/2020 ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரிகளில் 8 ஆயிரம் பேர் உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்களுக்கு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நியமிப்பதாகவும் வடக்கில் தெரிவு செய்யப்பட்டோரும் அதன்படியே நியமிக்கப்படுவதாகவும் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த, “இது சிக்கலானதுதான்; ஆனாலும் எதுவும் செய்ய முடியாது.



எனினும் ஏதாவது மாற்று வழிகளை கண்டறிய முயல்கின்றேன்” என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


## சாணக்கியன் எம்.பி சர்வதேசத்தின் கைக்கூலி



### அடிபணியமாட்டேன் என்கிறார் அலிசப்ரி

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சர்வதேசத்தின் கைக்கூலியாகவே செயற்படுகிறார் என்றும் அவரின் குற்றச்சாட்டுகளுக்கும் பொய்களுக்கும் நான் அடிபணியமாட்டேன் என்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 255 எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு சிக்கல்

குறைந்தபட்ச இருப்புகளை பராமரிக்கத் தவறிய எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## கஜேந்திரகுமார் விவகாரத்தால் அரச எம்.பிக்கள் கூச்சல்

### சபையை அடக்கினார் சபாநாயகர்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி குறித்த வாதப் பிரதிவாதங்களை அடுத்து, அரச தரப்பு உறுப்பினர்கள் சபையில் எழுந்து நின்று கூச்சலிட்ட நிலையில், சபைக்கு வருகை தந்த சபாநாயகர் இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்ததுடன், ஆகவே அதற்கு இடமளியுங்கள் என அறிவுறுத்தினார்.

தொடர்ச்சி P2





## ஒப்பந்தம் கைச்சாத்து

அமெரிக்காவை தளமாகக் கொண்ட பெற்றோலிய நிறுவனமான RM Parks நிறுவனம், Shell PLC உடன் இணைந்து இலங்கை பெற்றோலிய வர்த்தகத்தில் நுழைவதற்கான ஒப்பந்தம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வியாழக்கிழமை (08) கைச்சாத்திடப்பட்டது.

## 83 ஆயிரம் பேரை பிரேமதாஸ அனுப்பினார்

### சபையில் பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வேண்டுகோள் தொடர்பில் எமது அரசாங்கம் அவ்வாறு செயற்படப்போவதில்லை எனவும் எமது அரசாங்கம் அவ்வாறு பழிவாங்கும் அரசாங்கம் அல்ல என்றும் அவரது தந்தை பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் சிறு சம்பள அதிகரிப்பைக் கோரி வேலை நிறுத்தப் போராட்டம் செய்தமைக்காக 83



ஆயிரம் பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## கௌரவத்தை காத்த மஹிந்த



பாராளுமன்ற அரச நிதிக்குழு தலைவர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் எடுத்த நிலைப்பாட்டால் பாராளுமன்றத்தின் கௌரவம் காக்கப்பட்டது என்று அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற அரச நிதிக்குழுவின் தலைவர் நியமனம் தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, நேற்று வியாழக்கிழமை (08) தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



குருந்தூர்மலை விவகாரம்:

## செப்டெம்பர் 14க்கு வழக்கு ஒத்திவைப்பு

■ விஜயரத்தினம் சரவணன்

குருத்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கு, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (08) எடுத்துக்கொள்ளப்பட்ட போதே ஒத்திவைக்கப்பட்டது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில்,

தொடர்ச்சி P2



## டயனாவை கைது செய்ய ஏன் அவசரப்படவில்லை?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியைக் கைது செய்ய அரசாங்கமும் பொலிஸாரும் காட்டிய அவசரத்தை டயனா கமகே எம்.பி விடயத்தில் ஏன் காண்பிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற நிதி,

தொடர்ச்சி P2

## எரிபொருட்கள் நிலைய ஒப்பந்தம் கைச்சாத்து

ஷெல் நிறுவனத்துடன் இணைந்து, இலங்கையில் எரிபொருட்களை இறக்குமதி செய்தல், சேமித்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்தில் ஆர்.எம். பார்க்ஸ் நிறுவனத்துடன் இலங்கை கையெழுத்திட்டது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய ஜனாதிபதி செயலகத்தில் வியாழக்கிழமை (08) இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த மே 22 ஆம் திகதி, முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக்குடனும் இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.



PAGE 1 தொடர்ச்சிகள்

## 'புளொட்'...

வவுனியாவில் 2009 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 20 ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் நெடுமாறன் என்ற குறித்த நபர் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) வவுனியா வேப்பங்குளம் முகாமுக்கு பொறுப்பாக செயற்பட்டிருந்தார்.

மேல்நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் தீர்ப்புக்காக வியாழக்கிழமை (08) தவணையிடப்பட்டிருந்தது.

உயிரிழந்தவரின் உடலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள் எதிரியால் பயன்படுத்தப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்பட்ட நிலையில், எதிரி குற்றவாளியாக இனங்காணப்படுவதாக தீர்ப்பளித்த நீதிபதி, அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தநிலையில் 14 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்திருந்த நிலையில் தீர்ப்பின் பின்னர் அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

## பிடியாணை...

தனது பாதுகாப்புக்கு ஏற்றதாக கருதும் அனைத்து நடவடிக்கைகளையும் சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) எழுப்பிய சிறப்புரிமை மீறல் பிரச்சினையிலேயே மேற்கண்ட விடயத்தை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜூன் 2ஆம் திகதி நடந்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்வதற்கு எனது ஒத்துழைப்பை வழங்குமாறு மருதங்கேணி சம்பவத்தை தொடர்ந்து ஜூன் 5ஆம் திகதி மாலை சுமார் 3.30 மணியளவில் மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி என்னைத் தொடர்பு கொண்டார்.

அப்போது நான் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக கொழும்பு செல்லும் வழியில் இருந்தேன். இதனால் ஜூன் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் திரும்பி அதனை செய்வதாக கூறினேன்.

இதன்படி ஜூன் 12 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வந்து வாக்குமூலம் வழங்குவதாக கூறியிருந்தேன். இந்த உறுதிமொழிகள் இருந்த போதிலும் மருதங்கேணி பொலிஸார், கொள்ளுப்பிட்டி பொலிஸாரின் ஊடாக ஜூன் 6 ஆம் திகதி மதியம் 1 மணியளவில் என்னிடம் எழுத்து பூர்வ அறிவித்தலை அனுப்பினர்.

ஜூன் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் என்னை ஆஜராக வேண்டும் என்றனர். குறித்த தகவல் சிங்களத்தில் இருந்ததால் அதனை ஏற்கவில்லை. பின்னர் ஜூன் 6 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் எனது கொழும்பு வீட்டுக்கு வந்தனர். குறித்த அறிவித்தலை தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வழங்கினர்.

இவ்வாறான நிலைமையில் ஜூன் 7 ஆம் திகதி காலை என்னை கைது செய்ய வந்தனர். பிடியாணை எதுவும் இல்லை. இவ்வாறான நிலைமையில் கைது செய்வது எனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகும். பாராளுமன்ற கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்காது என்னைக் கைது செய்தனர். இது தொடர்பில் சபாநாயகரிடம் பேசி தொலைபேசியை வைத்தவுடன், என்னைக் கைது செய்தனர்.

அப்போது அவர்களிடம் பிடியாணை உள்ளதா என்று கேட்டேன். ஏதும் இல்லை என்றே கூறினர். மேலும் என்னை கைது செய்ததற்கான காரணம் உள்ளிட்டவை அடங்கிய ரசீ தை எனது குடும்பத்தினரிடம் வழங்குமாறு கேட்டேன். அதனையும் வழங்கவில்லை. ரசீது பின்னர் கொள்ளுப்பட்டி பொலிஸில் தனிப்பட்ட முறையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் நான் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன், அங்கு எனது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றார்

### டயனாவை...

பொருளாதார உறுதிப்படுத்துகை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவாக செயற்படுத்தப்படுகிறதா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. டயனா கமகே எம்.பி.யின் இரட்டை குடியுரிமை விவகார வழக்கின் தீர்ப்பு தொடர்ந்து பிற்போடப்படுகிறது. முறைகேடான முறையில் கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டுள்ள விவகாரத்தில் டயனா கமகேவை கைது செய்ய முடியும் என கோட்டை நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் அவரை இதுவரை கைது செய்யாததற்கான காரணம் என்ன?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.யைக் கைது செய்வதற்கு அரசும் பொலிஸும் காட்டிய அக்கறை டயனா கமகே எம்.பி விவகாரத்தில் ஏன் காண்பிக்கப்படவில்லை?" என்றார்.

## புதிய விதத்தில்...

விசேட தேவையுடையோர் தமது அன்றாட செயற்பாடுகளை, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை பயன்படுத்தி அறிதல் மற்றும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல் ஆகியவன தொடர்பில் ஆடல், பாடல் விளையாட்டின் ஊடாக தெளிவுப்படுத்தப்பட்டது.

## கஜேந்திரகுமார்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி. செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

மருதங்கேணி சம்பவம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி கைது தொடர்பான கஜேந்திரன் எம்.பி.யின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்,

"அந்தச் சம்பவம் தொடர்பில் நான் முதல் நாளே அறிக்கை கோரினேன். அது தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வீடியோக்களையும் பார்த்தேன். அதில் கஜேந்திரகுமார் எம்.பி ஒரு கௌரவ உறுப்பினராக நடந்து கொள்ளவில்லை. பொலிஸ் அதிகாரிகளை "வாயை மூடு" எனத் தரக்குறைவாக பேசியதை அவதானித்தேன்" என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. "சிவில் உடையில் வந்தவர்கள் பொலிஸ் என குறிப்பிட்டார்கள். நான் அதற்கான அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டேன். ஆனால் அவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தவில்லை. பொலிஸ் என்று குறிப்பிட்டுக் கொண்டு சிவிலுடையில் படுகொலையில் ஈடுபட்ட சம்பவங்கள் நாட்டில் பல உள்ளன" என்றார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், "அந்த காணியின் வேலிக்கு பின்னால் இருந்த பொலிஸ் அதிகாரியிடம் நீங்கள் முறையற்ற வகையில் கதைத்துள்ளீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?" எனக்கேட்டார். "இதற்கு பதிலளித்த கஜேந்திரகுமார் எம்.பி சீருடையில் ஆயுதமேந்திய நிலையில் இருந்த பொலிஸ் அதிகாரியுடன் நான் அப்படிப் பேசவில்லை" என்றார்.

தொடர்ந்து கூறிய அமைச்சர் டிரான் அலஸ், "பொலிஸாரை 'வாயை மூடு' எனக்கூறும் உரிமை எவருக்கும் கிடையாது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. விடயத்தில், பொலிஸாரின் பக்கம் எந்தத் தவறும் கிடையாது" என்றார்.

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி சம்பவம் இடம்பெற்ற தினத்தில் மாலை 3.30 மணிக்கு பரீட்சை முடிவடைந்து விட்டது. சிவில் உடையில் வந்தவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் தங்களை பொலிஸ் என குறிப்பிட்டுக் கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியுமா ? பாராளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெறும் வாரத்தில் கஜேந்திரகுமார் கொழும்புக்கு வருகை தந்துள்ளார். ஆகவே அவரை அவசரமாக ஏன் கைது செய்ய வேண்டும்" என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், பரீட்சை தொடர்பில் வீடியோவை பார்த்து அறிவிக்கலாம். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் கடந்த 5 ஆம் திகதி முதல் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தொடர்பு கொண்டார்கள். இறுதியில் சபாநாயகருக்கு அறிவித்ததன் பின்னரே கைது செய்யப்பட்டார். இவ்விடத்தில் அவசரப்படவில்லை" என்றார்.

இதன்போது எழுந்த கஜேந்திரகுமார் எம்.பி இந்த சம்பவத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்னை குற்றவாளியாக்கி பொலிஸாரை பாதுகாப்பது தெளிவாக விளங்குகிறது" என்றார்.

## 255 எரிபொருள்...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனங்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இயக்கப்படும் 1,050 எரிபொருள் நிலையங்களில் 432 மட்டுமே கடந்த வாரம் அனைத்து பொருட்களிலும் குறைந்தபட்ச இருப்பு வைத்திருந்ததாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

255 உரிமையாளர்கள் எந்தவொரு தயாரிப்புகளுக்கும் குறைந்தபட்ச இருப்புகளை பராமரிக்க தவறியதாகவும் தெரியவந்ததுடன், 363 பேர் ஒரு தயாரிப்புக்கான குறைந்தபட்ச இருப்பை வைத்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

உடன்படிக்கைகளில் நிபந்தனைகளை மீறும் உரிமையாளர்களுக்கு எதிராக மீளாய்வு செய்து தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கூட்டுத்தாபனத்துக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

கூட்டத்தில் அடுத்த 18 மாதங்களுக்கான சரக்கு திட்டம், கூட்டுத்தாபன இருப்புநிலை மறுசீரமைப்பு, போக்குவரத்து பௌசர்களுக்கான கொடுப்பனவுகள், கியூஆர் விநியோகம், நாடு முழுவதும் எரிபொருள் விநியோக திட்டம் மற்றும் சேமிப்பு முனையத்தின் உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## நிதிக்குழு தலைவரை...

விடுத்தபோதும் அவருக்கு தலைவர் பதவி கிடைக்காமல் இருப்பதற்கு சிலர் சதி செய்தனர்.

அதேநேரம் தற்போது ஹர்ஷடி சில்வா அரசாங்க நிதிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இருந்தபோதும் அவரை தலைவராக நியமிக்க நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்தா இதனை மேற்கொள்ள வேண்டும்?தாமதித்தேனும் இந்த பதவியை ஹர்ஷடி சில்வாவுக்கு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் அவருக்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

இருந்தாலும் நிலையியற் கட்டளையில் இல்லாத ஒன்றே இடம்பெற்றிருக்கிறது. ஜனாதிபதி வந்ததுதான் அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் பதவிக்கு நியமனம் வழங்க வேண்டும் என்றால் நிலையியற் கட்டளை தேவையில்லை.

அத்துடன் பல மாதங்களாக அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் நியமிக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டது. அதில் பயங்கரமான விடயம் என்ன வென்றால், அந்த காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் பதில் தலைவர்களை நியமித்துக்கொண்டு, எந்தவித ஆய்வும் மேற்பார்வையும் இல்லாமல் சட்ட திட்டங்களை கொண்டுவர அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

எனவே பாராளுமன்றத்தின் கௌரவம் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் நிலையியற் கட்டளைகளை பாதுகாத்து, அதன் பிரகாரம் செயற்படுவது சபாநாயகராகிய உங்களது பொறுப்பாகும். இல்லாவிட்டால் அரசாங்க நிதிக்குழுவின் தலைவரை நியமிக்க நிறைவேற்று ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வரவேண்டும் என புதிய நிலையியற் கட்டளை ஒன்றை கொண்டுவர வேண்டிவரும் வரும்"என்றார்.

## 83 ஆயிரம் பேரை...

அரசாங்க நிறுவனம் ஒன்றில் தொழிற்சங்கத்தை சார்ந்த அதிகாரி ஒருவர் அலுவலகத்தில் இருந்த ஈமெயில் வசதிகளை உபயோகப்படுத்தினார் என்ற காரணத்திற்காக கொழும்பில் உள்ள பிரதான அலுவலகத்தில் இருந்து அவர் கலவானை கிளைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை கேள்வி யொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

அவ்வாறு இடம் பெற்றிருந்தால் அதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமரைக் கேட்டுக் கொண்ட போதே அதற்கு பதிலளித்த பிரதமர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்ததுடன், மேலும் தெரிவிக்கையில்,

"சம்பந்தப்பட்ட அமைச்சுடன் அல்லது திணைக்களத்துடன் பேச்சு நடத்தி அதற்கான பதில் வழங்கப்படும். தொழிற்சங்க தலைவர் ஒருவரின் பிரச்சினை தொடர்பாக சபையில் எதிர்க்கட்சித் தலைவர் குரலெழுப்புவது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் வியப்புமடைகின்றேன்.

அவரது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். கொத்துக்கொத்தாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள் என்றார்.

## கௌரவத்தை...

லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி,"நிதிக்குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்று பல மாதங்களாக கூறி வருகின்றோம். இறுதியாக, ஜனாதிபதி வந்து ஹர்ஷ டி சில்வாவை நியமனம் செய்தார். இதன்மூலம் சபாநாயகரிடமிருந்து எங்களுக்கு ஏதாவது செய்ய முடியாவிட்டால் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

நிதிக் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு சொந்தமானது. அது கொடுக்கப்படவில்லை. போராட்டத்தின் போது கொஞ்சம் கொடுக்கப்பட்டது. பின்னர் திரும்ப எடுக்கப்பட்டது. ஆளுங்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை காக்க வேண்டியவர் நீங்கள். அரசின் பக்கம் இல்லாமல் எங்கள் பக்கம் இருங்கள்" என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், "நான் யாருடைய பக்கமும் நிற்கவில்லை. அந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொந்தமானது. பாராளுமன்ற உறுப்பினர்களே முடிவெடுக்க வேண்டும்" என்றார்

மீண்டும் எழுந்த கிரியெல்ல எம்.பி. "சபாநாயகரே இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியும். ஆளும் கட்சிக்கு அடிபணிந்து நீங்கள் இதனை எமக்கு வழங்கவில்லை. பாராளுமன்றத்தில் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முடியாவிட்டால் ஜனாதிபதியிடம் சென்று சொல்லுங்கள் என்றீர்கள்" என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் பிரசன்ன, "எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் தவறான விளக்கம் அளித்துள்ளார். ஹர்ஷ டி சில்வாவை வாழ்த்துகிறோம். இந்த விடயத்தில் சபாநாயகர் எடுத்த நிலைப்பாட்டினால் பாராளுமன்றத்தின் கௌரவம் காப்பாற்றப்பட்டது" என்றார்.

## செப்டெம்பர் 14க்கு...

2022ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை நிர்மாணிக்கப்பட்டது.

அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்தபிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பாண்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொண்ட இந்த முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் சமூகஆர்வலர் ஜூட்நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல் தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் தேரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டவர்களை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்த நிலையில், மூவரும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த விசாரணைகளைத் தொடர்ந்து பொலிஸாரால் 2022 செப்டெம்பர் 20 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் B/688/2022 என்னும் வழக்கிலக்கத்தில் குறித்த வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

## 2,479 பேருக்கு டெங்கு

இவர்களில் 22.1 வீதமான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் 21 வீதமான டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தற்போது 67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதுடன், வருடத்தின் இதுவரையான காலப்பதிக்குள் 25 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிக்கல்தான் எதுவும்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. ஸ்ரீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஆசிரியர் கலாசாலைகள், கல்வியியல் கல்லூரிகளிலிருந்து மெரீட் , மாவட்ட அடிப்படையில் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் வெளிமாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு வழங்கப்படும் 37 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வெளிமாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் இவர்களினால் போக்குவரத்து, தங்குமிட வாடகை, உணவுச் செலவு போன்றவற்றை எப்படி சமாளிக்க முடியும்? எனவே அவர்களை வடக்கு மாகாணத்திலேயே நியமிக்க முடியாதா?" என்று ஸ்ரீதரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர், "2019/2020 ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரிகளில் 8 ஆயிரம் பேர் உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர். கொரோனா நெருக்கடியினால் ஆசிரியர் நியமனங்கள் தாமதமான நிலையில் விரைவில் இவர்களில் 7, 500 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கவுள்ளோம்.

இவர்களுக்கான நியமனங்களை வர்த்தமானி அறிவித்தலில் அடிப்படையிலேயே வழங்க வேண்டியுள்ளது. அதனால்தான் ஒரு மாகாணத்தில் உள்ளவர்கள் இன்னொரு மாகாணத்துக்கு நியமிக்கப்படுகின்றனர். இது சிக்கலானதுதான். ஆனால் தவிர்க்க முடியாதது. எனினும் நான் ஏதாவது மாற்று வழிகளை கண்டறிய முயற்சிக்கின்றேன்" என்றார்.

## சாணக்கியன்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"புலம்பெயர் பிரிவினைவாதிகளின் கைக்கூலி ஒருவர் இந்தப் பாராளுமன்றத்தில் உள்ளார். அவர் பெயர் சாணக்கியன் இராசமாணிக்கம். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாடுகளை இவர் விரும்பமில்லை. பிரச்சினைகளை நீடித்து அதனூடாக இலாபமடைவதை நோக்கமாக கொண்டுள்ளார். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எவரேனும் நடவடிக்கை எடுக்கும் போது அதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நான் செயற்படும் போது, புலம்பெயர் பிரிவினைவாதிகள் அவருக்கு அதனை குழப்புமாறு ஆலோசனை வழங்குகின்றனர். இவர் அவர்களின் கைக்கூலி என்பதால் தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, பாராளுமன்றத்தில் கடுமையாக கருத்துகளை, பொய்களை முன்வைக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நான் வீடு ஒன்றைக் கொடுத்ததாக புதன்கிழமை இந்தச் சபையில் குறிப்பிட்டுள்ளார். நான் எவ்வாறு அவருக்கு வீடு வழங்க முடியும்? தொழிலுக்காக நான் அரசியலுக்கு வரவில்லை. சொந்த உழைப்பில் கட்டிய வீட்டில் தான் நான் வாழ்கிறேன். நான் எனது வீட்டை யாருக்கும் வழங்கவில்லை.

பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் இருந்து கொண்டு முறையற்ற விடயங்களை குறிப்பிட முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சர்வதேசத்தின் கைக்கூலியாகவே செயற்படுகிறார்.

குரைக்கும் நாயை நோக்கி கல்லெறிந்து கொண்டிருந்தால் சிறந்த இலக்கு நோக்கி பயணிக்க முடியாது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குறிப்பிட்ட கருத்துகள் அடிப்படையற்றவை.

நாங்கள் எமது பயணத்தை சிறந்த முறையில் வெற்றி கொள்கிறோம். நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவோம். புலம்பெயர் பிரிவினைவாத நோக்கத்துடன் செயற்படும் தரப்பினரின் அச்சுறுத்தலுக்கும்,சேறுபூசலுக்கும் அடிபணிய மாட்டேன்" என்றார்.



# மணல் அகழ்ந்தோர் அதிகாரிகளிடம் சிக்கினர்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கொழும்பில் இருந்து வந்த புவிச்சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகளிடம் வியாழக்கிழமை (08) வசமாக மாட்டிக் கொண்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த புவிச்சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட புவிச்சரிதவியல் சுரங்க பணியக அதிகாரிகளும் இணைந்து தேத்தாவாடி பிரதேசத்தை பார்வையிட்டனர்.

தேத்தாவடி பகுதியில் அனுமதிப்பத்திரம் உள்ள இடங்களில் அகழப்படும் மண் களஞ்சியப்படுத்தும் இடங்களில், சட்ட விரோதமான முறையில் அகழ்வு செய்யப்பட்ட மண்ணையும் சேர்ந்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவு இயந்திரங்கள், 3 ஜே.சி.பி இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவை அனைத்துக்குமான அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் பாதுகாப்பு பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்திய நிலையில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# புத்தளம் நகரில் துடிதுடித்து உயிரிழந்த காகங்கள்

எம்.யூ.எம் சனூன்

புத்தளம் - நெடுங்குளம் வீதியின் குடியிருப்புப் பகுதியில், சுமார் 50க்கும் மேற்பட்ட காகங்கள் திடீரென உயிரிழந்துள்ளதுடன் சில காகங்கள் சோர்வடைந்த நிலையிலும் காணப்பட்டன.

குறித்த சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் வதியும் பொது மக்கள், புத்தளம் பிரதேச மிருக வைத்திய உத்தியோகத்தர் அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினர். இதையடுத்து அப்பகுதிக்கு அதிகாரிகள் வருகைத் தந்து, உயிரிழந்த காகங்களை பார்வையிட்டதுடன், காகங்கள் உயிரிழந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக, மாதிரிகளை பகுப்பாய்வுக்காக பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைத்தனர்.



# பெண் கான்ஸ்டபிளை ஏமாற்றிய கான்ஸ்டபிள்



பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, ஒரு இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது

பதவிய பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் திருமணமான பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியபோது, குறித்த சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிளும் காதலித்த நிலையில், குறித்த பெண் கான்ஸ்டபிளை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து ரூபாய் ஒரு இலட்சம் பணம் பெற்றுள்ளார்.

சந்தேக நபர் பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாக வவுனியா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவில் பெண் கான்ஸ்டபிளால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மூங்கிலாறு வடக்கில் இயற்கை உரத்தொழிற்சாலை





செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மூங்கிலாறு வடக்கில் உடையார் கட்டு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தின் இயற்கை உரதொழிற்சாலை நேற்று முன்தினம் (07) திறந்துவைக்கப்பட்டது.

உடையார் கட்டு விவசாயிகள் கூட்டுறவு சங்க தலைவர் சே. யோகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கமலேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான தேவந்தினி பாபு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன்போது, இயற்கை உரம் தயாரித்தல் தொடர்பில் விருந்தினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன் பொதிசெய்யப்பட்ட இயற்கை உரம் சம்பிரதாயபூர்வமாக அறிமுகம் செய்து, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் விருந்தினர்களால் மரக்கன்றுகளும் நாட்டிவைக்கப்பட்டன.



## கனடா டொக்டர் வரதன் காரைதீவில்

# விஞ்ஞான, கணிதத்துறை மாணவர்களுக்கு அறிவுரை

வி.ரி சகாதேவராஜா

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் 2024 உயர்தர விஞ்ஞானத்துறையில் கற்கும் மாணவர்களை, கனடாவில் வாழும் காரைதீவின் பற்றாளரும் இருதய நோய் நிபுணருமான டொக்டர் அருளானந்தம் வரதராசா சந்தித்து, அவர்களது கற்றலில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை கேட்டறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான முறைகளைத் தெளிவுபடுத்தினார்.

TRAKS & ASCO அமைப்பின் ஸ்தாபகரான டொக்டர் வரதராசாவுடன் அமைப்பின் உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இச்சந்திப்பு விபுலானந்தா மத்திய கல்லூரி அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது. விஞ்ஞான கணிதத்துறை பொறுப்பாசிரியர் பத்மநாதன் கேதீஸால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தச் சந்திப்பில் விஞ்ஞான, கணிதத்துறை மாணவர்கள், தாங்கள் எதிர்நோக்கும் சவால்களையும் கற்றல் இடர்பாடுகளையும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

# தன்னுயிரை மாய்த்த லபுக்கலை சிறுவன்


டி.சந்ரு செ.திவாகரன்

நுவரெலியா, லபுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த 14 வயதான சிறுவன் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதிலும், இடையிலேயே மரணித்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

லபுக்கலை கீழ் பிரிவில் வசிக்கும் நடேசன் ஆக்காஷ்ராஜ் (வயது-14) என்ற சிறுவனே, வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் தொடர்பில்

# தகவல் கோரல்



க. அகரன்

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், வவுனியா பொது வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி கோரியுள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையில், அண்மையில் அனுமதிக்கப்பட்ட குறித்த வயோதிபர் சிங்கள மொழி பேசுபவர் என்பதுடன், தன்னை குணபால மென்டிஸ் என அறிமுகப்படுத்தியுள்ளார். எனினும், இவர் தொடர்பில் எவ்வித மேலதிக தகவலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வயோதிபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல பிரிவுடனோ அல்லது வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் சி. சுதாகரன் அலைபேசி இலக்கம் 0714323585, உளநல பிரிவு 0242227784, 12 ஆவது விடுதி இலக்கம் 0242222762, 0242222262 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் கையைக் கடித்த கசிப்பு மன்னனின் மனைவி



கசிப்பு மன்னனின் மனைவி, பொலிஸ் உயர் அதிகாரியின் கையைக் கடித்து பதம்பார்த்த சம்பவமொன்று வறக்காப்பொலயில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

வறக்காப்பொல, தொலபாடுவ பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சி விற்பனை செய்யும் நபரை கைது செய்வதற்காக, கேகாலை ஊழல் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப-பொலிஸ் பரிசோதகரும் சென்றுள்ளனர்.

அப்போதே, அந்த அதிகாரியின் கையை கசிப்பு மன்னனின் மனைவி கடித்து விட்டு அங்கிருந்து தப்பியோடி தலைமறைவாகியுள்ளார்.

காயமடைந்த மற்றுமொரு பொலிஸ் உபபரிசோதகர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கையைக் கடித்த பெண்ணைத் தேடி கேகாலை மற்றும் வறக்காப்பொல பொலிஸார் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருதொகை கசிப்பு போத்தலுடன் அதனை ஏற்றிச் சென்ற ஓட்டோவையும் கைப்பற்றியுள்ள பொலிஸார், ஒருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரான அந்தப் பெண், தன்னுடைய கணவனை பொலிஸாரிடம் இருந்து விடுவித்துக்கொள்ளும் நோக்கிலேயே, பொலிஸ் அதிகாரியின் கையைக் கடித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## காணாமல் ஆக்கப்பட்டரின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்

# சர்வதேச நாணய நிதியத்தின் தலைவியை பதவி விலகக் கோரிக்கை

க. அகரன்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், நேற்று (08) வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் ஆரம்பித்து 2,300 ஆவது நாளான நேற்று, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் உள்ள கொட்டகையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் தலைவி, பதவி விலககோரிய பாதாகையையும் காட்சிப்படுத்தி இருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்க செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோரின் தமிழ் தாய்மார்கள், சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாவை இராஜினாமா செய்யுமாறு வேண்டுகிறோம். இவரின் கீழ், இலங்கைக்கு நாணய




நிதியத்தின் நிதியுதவி கிடைத்தது. அது, தமிழருக்கு எதிரான ஆக்கிரமிப்பு, ஒடுக்குமுறைக்கு ஆதரவை வழங்குகிறது. கடனுக்கு முன்பிருந்ததை விட, இலங்கையின் ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறையால் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு பின்னர், இலங்கை இராணுவமும் பௌத்த பிக்குகளும், சட்டவிரோதமாக தமிழர்களின் நிலங்களை அபகரித்து, சிங்கள - பௌத்த சின்னங்களை கட்டியுள்ளனர். நாணய நிதியத்தின் நிதியுதவி, பண்டைய இந்து கோவில்களை அழிக்கவும் அழிக்கப்பட்ட கோவில்கள் இருந்த இடத்தில் பௌத்த சின்னங்களைக் கட்டவும் பயன்படுத்தப்படுகின்றது.

இந்தப் பௌத்த சின்னங்கள் தமிழர்களால் வெறுக்கப்படுகின்றன. ஏனெனில், இந்தச் சின்னங்கள் இன அழிப்பு மற்றும் தமிழர் தாயகத்தில் சிங்களர்களின் குடியேற்றத்தை குறிக்கின்றன.

2009ஆம் ஆண்டு, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலரி கிளின்டன், தனது பதவிக் காலத்தில் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனை எதிர்த்து, “இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை, நாணய நிதியத்தின் கடனை கருத்தில் கொள்வது பொருத்தமான நேரம் அல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். ஒரு தீர்வு கொண்டு வருவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்” என்று கூறியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் தமிழர்களின் சுதந்திரத்தை அழித்து, அவர்களின் சொந்த மண்ணில் அவர்களின் இருப்பை அழிக்க இலங்கைக்கு உதவுகிறது. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாவை பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்” எனத் தெரிவித்தார்.

# ஆடைத் தொழிற்றுறையை கட்டிக்காப்பது அவசியமாகும்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில், உயர்தரம் கற்பதற்கு தேவையான பெறுபேறுகள் கிடைக்காவிடின், பெரும்பாலானவர்களின் முதல் தெரிவு ஆடை தொழிற்றுறை ஆகத்தான் இருக்கும். சிலர், பரீட்சை நிறைவடைந்த மறுநாளே, ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றுவிடுவர்.

உயர்தரத்தில் கற்கவேண்டுமாயின் அதற்கு தேவையான பணத்தை ஓரளவுக்கேனும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கில், தற்காலிகமாக வேலைக்கு சிலர் இணைந்துகொள்வர். பேறுபேறுகள் போதாவிடின், நிரந்தர ஊழியர்களாகிவிடுவர்.

காலவோட்டத்துக்கு ஏற்றவகையில், தங்களை மாற்றிக்கொள்ளும் பலரும், முதல் தெரிவாக ஆடைத்தொழிற்சாலையை தேர்ந்தெடுப்பது தற்காலத்தில் அரிதாகும். ஏனைய தொழிற்றுறைகளில் காலடி எடுத்துவைத்து, முன்னேற்றப்பாதையில் நகர்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஆடைத் தொழிற்றுறையின் ஊடாக நாடுக்கு பெருமளவில் அன்னியசெலாவணி கிடைத்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி இத்துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மூலப்பொருட்கள் இறக்குமதி, முடிவுப்பொருள் ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளே, இத்துறை பின்னடைந்தமைக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

எனினும், கொரோனா காலத்தில் ஆடை தொழிற்றுறையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையால், அதிலிருந்து நாட்டுக்குக் கிடைத்த வருமானம், எரிபொருள், உணவுப்பொருட்கள், மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டமையை மறந்துவிடக்கூடாது.

ஆடைத் தொழிற்றுறையில் தைக்கப்பட்ட ஆடைகளுக்கான கேள்வி 18 சதவீதமாக குறைந்துள்ளது என்றும் அது 20 சதவீதம் வரையிலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்குலக நாடுகளில் இருந்த கேள்வி, குறைந்துகொண்டே செல்கின்றது.

ஆகையால்தான், ஆடை தொழிற்றுறை இழுத்து மூடப்படும் அபாயத்தில் உள்ளதென்ற தகவல் பரவியுள்ளது. இது, வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும், ஆடைத் தொழிற்றுறையை நம்பியிருக்கும் குடும்பங்களில் வயிற்றில் புளியைக் கரைத்தால் போலுள்ளது.

கடந்தகாலங்களைப் போல, சம்பளமும் மேலதிக நேரக்கொடுப்பனவும் கிடைப்பதில்லை. ஆனால், செலவுகள் பன்மடக்காக அதிகரித்துள்ளன. சில ஆடைத்தொழிற்சாலைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்த ஊழியர் நலன்சார் திட்டங்கள் முழுமையாக கைவிடப்பட்டுள்ளன. இதனால், சாதாரண ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்று கொஞ்சமேனும் சம்பாதித்து, தங்களுடைய குடும்பத்தை காப்பாற்றமுடியும் என்று நினைத்த பலரும், அந்த நினைப்பை கைவிட்டு, மாற்றுத் துறைகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

நாட்டில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை; வரிசைகள் ஒழிக்கப்பட்டுள்ளன; பொருட்களின் விலை அதிகரிப்பு தற்காலிகமானது என்று கூறப்படுவது மக்களின் மனங்களை தேற்றும் சொற்களே தவிர, அவை அறுதியானவை அல்ல. மீண்டுமொரு நெருக்கடிக்கு நாடு முகங்கொடுக்குமென தகவல்கள் கசிந்துள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடனை செலுத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பிக்கவில்லை. ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதியும் குறைந்துகொண்டே செல்கின்றது. இவையெல்லாம் நல்ல அறிகுறிகள் இல்லை என்பதையும் நினைவில் கொண்டு, ஆடைத் தொழிற்றுறையை காப்பாற்றி, அதில் தங்கிவாழும் குடும்பங்களை காப்பற்றவேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirrorofficial@gmail.com






## வாழ்வியல் தரிசனம்

முட்டைக்குள் இருந்த பறவைக் குஞ்சுகள், வெளியேறும் காலம் வந்த பின்பு, சின்னச்சிறகுகளை அடித்த வண்ணம் சுதந்திரமாகப் பறக்கின்றன. ஆனால், மனிதர்களில் அநேகர் பரந்த உலகைப் பார்க்காமால், இரசிக்காமல் வீட்டுக்குள் முடங்கி இருக்கின்றனர்.

உலகத்தின் தகவல்களை அறியாமல் வாழ்வது துரதிர்ஷ்டம் ஆகும். கிராமத்து மனிதர் சொன்னார், “நான் யாழ்ப்பாண நகரத்துக்கே போனதில்லை. எங்கள் ஊரிலேயே இருக்கின்றேன். விவசாயம் செய்கின்றேன்” என்றார். யாழ். மாவட்டத்தில் இருந்து கொண்டு, வடக்கின் பிரதான நகரமான யாழ்ப்பாணம் போவதில்லை எனச்சொல்வது அதிசயம் அல்லவா!

வானொலியில் கூட செய்தி கேட்காதவர்கள் இருக்கின்றனர். கல்வியறிவு இல்லாதவர்கள் கூட, உலக அறிவை விரும்புகின்றனர். பொது அறிவு கூட கல்வி தான். உலகை அறிவதில் ஏது தயக்கம்?

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

கறுப்பு ஜூலை நாற்பதாண்டுகளின் பின்னர் – 04:

# சமூக அசைவியக்கத்தில் மதமும் முரண்பாடுகளும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கை அரசியலில் மதத்துக்கு முக்கிய பங்குண்டு. அரசியலமைப்பின் வழி, பௌத்தத்துக்கு பிரதான இடம் வழங்கப்படுவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே, மதம் முக்கியமான ஒன்றாகிவிட்டது.

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில், மத அடையாளம் பிற அடையாளங்களை மேவி, முன்னிலைக்கு வரத் தொடங்கியது. சிங்கள அடையாளம் என்பது, அடிப்படையில் மொழி ரீதியானது. ஆனால், இவ்வடையாளம் மெதுமெதுவாக சிங்கள - பௌத்த அடையாளமாக மாறத் தொடங்கியது. அதற்கு கிறிஸ்தவத்தின் செல்வாக்கும் கிறிஸ்தவ மிசனரிகளின் வருகையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின.

இலங்கையில் கொலனியாதிக்கம், மெதுமெதுவாக பல்வேறு சமூக மாற்றங்களுக்குப் பங்களித்தது. குறிப்பாக, மதம் சார்ந்த மாற்றங்கள் கவனிக்கத்தக்கவை.

கிறிஸ்தவ மதத்தின் வருகையும் மிசனரிகளின் வருகையும் மதமாற்றத்தையும் கிறிஸ்தவ நிறுவனமயமாக்கலையும் சாத்தியமாக்கின. அதேவேளை, சில விதிவிலக்குகளையும் நோக்குதல் வேண்டும்.

குறிப்பாக, சிங்கள சமூகத்தில் இருக்கின்ற ‘கராவே’, ‘சலாகம’ எனும் இரண்டு சாதியினரும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பது நிறுவப்பட்டுள்ளது. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ஒல்லாந்தாரால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட ‘சலாகம’ சமூகத்தினர், சிங்களத்தை மொழியாகவும் பௌத்தத்தை மதமாகவும் ஏற்றனர். இவ்வாறு, ஏனைய பல சிங்கள, தமிழ் சமூகங்களிலும் பல அயல் குடியமர்வுகள், கொலனியாதிக்கத்தின் விளைவால் நிகழ்ந்துள்ளன; இவை பேசப்படுவதில்லை.

கண்டி இராச்சியம் கைப்பற்றப்படும்வரை, கொலனியாதிக்கம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் மிகவும் அழுத்தத்துடன் செயற்பட்டது. இது, இடைநிலைச் சாதிகளை உருவாக்கப் பங்களித்தது பற்றி இத்தொடரின் முன் அத்தியாயங்களில் பார்த்தோம்.

கண்டி இராச்சியத்தை கைப்பற்றிய பின்னர், அதை இலகுவாக ஆட்சிசெய்வதற்கு பௌத்த பீடங்களின் ஆதரவு தேவைப்பட்டது. இதனால், பௌத்த மதத்துக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டன.

அதேவேளை, மதத்தை மையமாகக் கொண்டு, சமூக முரண்பாடுகள் தோற்றம் பெறத் தொடங்கின. இதை அவதானித்த பிரித்தானிய கொலனி நிர்வாகம், மதம் என்ற விடயத்தில் நெகிழ்வுப் போக்குடன் செயற்பட முடிவு செய்தது. இது, பௌத்தம், சைவம் என்பவற்றின் மறுமலர்ச்சிக்கு வாய்ப்பானது.

அதேவேளை, இந்த மறுமலர்ச்சியை முன்னெடுத்தவர்களிடம் இருந்த கொலனிய எதிர்ப்பு, கொலனியாதிக்கத்தை இலங்கையில் இருந்து வெளியேற்றுவது என்ற திசைவழியில் வளரவில்லை என்பதையும் பிரித்தானிய கொலனிய நிர்வாகம் நன்கறிந்திருந்தது.

பிரித்தானிய கொலனியாதிக்க காலத்தில், தமிழ்நாட்டில் தமிழ் அடையாளம், தனித்துவம் பற்றிய அக்கறைக்கும் எழுச்சிக்கும் வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யு போப் போன்ற பல ஐரோப்பியர்கள் முக்கிய பங்காற்றினார்கள், அவ்வகைப்பட்டே, இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு அமெரிக்கரான கென்றி ஒல்க்கொட்டும் ரஷ்யரான ஹெலீனா பிளவாட்ஸ்கி அம்மையாரும் பிரதான பாத்திரத்தை வகித்தார்கள்.

கிறிஸ்தவ மிசனரிகளின் செயற்பாடுகளில், கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டமை சைவ, பௌத்த அடையாள அரசியலுக்கு மிகப்பெரிய சவாலானது. குறிப்பாக, சாதி ரீதியாக கட்டமைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் சைவ, பௌத்த மதங்களுக்கு முக்கிய பங்கிருந்தது.

குறிப்பாக, 1824இல் உடுவிலில் ஆரம்பிக்கப்பட்ட விடுதியுடன் கூடிய பெண்கள் பாடசாலை, சமூகத்தில் நிலவிவந்த பாலின ஒடுக்குமுறைக்கு எதிரான முக்கியமான எதிர்வினையாக இருந்தது. உடுவில் மகளிர் கல்லூரி, ஆசியாவின் முதலாவது விடுதியுடன் கூடிய பெண்கள் பாடசாலை என்ற பெருமையைப் பெற்றது.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிசனரிகள் மிகவும் முக்கியமான சமூகப் பணியைச் செய்தார்கள். இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது, யாழ். குடாநாட்டில் இருந்த அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் மிஷனரிகள், அங்கு செல்வாக்கு பெற்றிருந்ததால், தீவின் மற்ற பகுதிகளில் இருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கான முதல் அமெரிக்க மிஷனரி, வணக்கத்துக்குரிய சாமுவேல் நியூவெல், 1813இல் மொரிஷியஸ் செல்லும் வழியில் தற்செயலாக காலியை வந்தடைந்தார்.

கிறிஸ்தவ மிஷனரிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள சாதிய அமைப்பை ‘இறைவழியில் இல்லை’ என்ற அடிப்படையில் நிராகரித்தனர். அச்சு இயந்திரம், புகைப்படக் கருவி, கட்டடக்கலை, தையல் இயந்திரம் ஆகிய தொழிற்புரட்சி இயந்திரங்கள் மிசனரிகளின் துணையால் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவில் அறிமுகமாகின.

மிஷனரிகள், தமிழ்ப் பண்பாட்டுக்கும் சமூகத்துக்கும் வெவ்வேறு வழிகளில் பங்களித்தனர். வணக்கத்துக்குரிய மிரோன் வின்ஸ்லோ தமிழ்-ஆங்கில அகராதியை முதன்முதல் விரிவான முறையில் வெளியிட்டார். மானிப்பாய் மிஷன் மருத்துவமனையின் ஸ்தாபகரான டொக்டர் சாமுவேல் கிரீன், சுமார் 4,500 பக்கங்கள் கொண்ட ஆங்கில மருத்துவத்தின் முக்கிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார்.

கிறிஸ்தவ மிசனரிகள் மதத்தைப் பரப்பும் முக்கிய கருவியாக பாடசாலைளைப் பயன்படுத்தினார்கள். சாதிய ரீதியாக ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு நடந்துகொண்டார்கள். இதனால் கல்வி ரீதியான முற்போக்கான சமூகத்துக்கான வாய்ப்புகள் உருவாகின.

இந்நிலையிலேயே, இதற்கு எதிர்வினையாக கல்வி நிலையங்களை உருவாக்குவதே, எமது மதத்தைக் காப்பதற்கான வழி என சைவ, பௌத்த மதநம்பிக்கையாளர்கள் நினைத்தார்கள்.

முன்னோடியாக, 1849இல் ஆறுமுக நாவலர் ஒரு சைவப் பாடசாலையை யாழ்ப்பாணத்தில் நிறுவினார். ஆனால், இதில் சாதிரீதியாகப் பிற்படுத்தப்பட்டோருக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதன் தொடர்ச்சியாக, கிறிஸ்தவத்துக்கு எதிரான பௌத்த மறுமலர்ச்சியின் செயற்பாடுகள் 1860களில் பௌத்த கல்வி நிலையங்களை உருவாக்குவதுடன் தொடங்கின. இதில், இன்று பல்கலைக்கழகங்களாக விரிவடைந்துள்ள வித்யோதய மற்றும் வித்தியாலங்கார பிரிவேனாக்கள் முதன்மையானவை.

முஸ்லிம் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் எகிப்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்த அரபி பாஷா ஆவர். இவர், இலங்கையில் இருந்த 18 ஆண்டுகளில் (1883-1901) முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு முதன்மையான பங்களிப்பை வழங்கினார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சைவ, பௌத்த, இஸ்லாமிய மறுமலர்ச்சியை இலங்கையில் இருந்த பிரித்தானிய நிர்வாகம் சகித்துக் கொண்டது. ஏனெனில், இவை எதுவும் கொலனியாதிக்கத்தை அகற்றும் நோக்குடையதாக இருக்கவில்லை.

மாறாக, தங்கள் மதச் சுதந்திரத்தையும் தத்தம் சமூகத்தில் தங்கள் உயர்நிலையை உறுதிப்படுத்துவதையும் மட்டுமே நோக்காகக் கொண்டிருந்தன. பௌத்த மறுமலர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியவர் டேவிட் ஹேவாவித்தான என்ற இயற்பெயரைக் கொண்டவரும் கிறிஸ்தவ மிசனரிகளில் கல்வி கற்றவருமான அநகாரிக தர்மபால. இவர், கென்றி ஒல்க்கொட், பிளவாட்ஸ்கி அம்மையார் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இறையியல் சங்கத்தில் உறுப்பினராகி, அவர்களால் வழிநடத்தப்பட்டார்.

காலப்போக்கில் அவர்களுடன் முரண்பட்டு, 1891இல் மகாபோதி சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். 1893இல் சுவாமி விவேகானந்தர் தனது புகழ்பெற்ற உரையை நிகழ்த்திய சிக்காகோ மாநாட்டில், அநகாரிக தர்மபால ‘கீழைத்தேய பௌத்தம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இலங்கையில் பௌத்தம் தொடர்பில் நன்கறியப்பட்ட ஒரு செயற்பாட்டாளராக அநகாரிக தர்மபால அறியப்பட்டபோதும், அவரால் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சாதிய ரீதியாகப் பிளவுற்றிருந்த சிங்கள-பௌத்த சமூகம் கண்டிச் சிங்களவர் - கரையோரச் சிங்களவர் என்றும் பிரிவுற்றிருந்தனர்.

கண்டி-கரையோர வேறுபாடு, சிங்கள சமூகத்தில் ஆழ வேரூன்றி இருந்தது. குறிப்பாக கரையோரம் போத்துகேயரின் காலம் தொட்டே கொலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. 1815இலே கண்டி கொலனியாதிக்கத்துக்கு உட்பட்டது.

இந்த வேறுபாட்டின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைத் தருவது பொருத்தம். இலங்கையின் முதன்முறையாக சமஷ்டி என்ற எண்ணக்கருவை முன்மொழிந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, 1929இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில், “கண்டி, கரையோரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களவர்களுக்குத் தனித்தனியான அரசும், தமிழர்களுக்கு தனியான அரசும் சமஷ்டி அடிப்படையில் பகிரப்பட வேண்டும்” என்று கோரினார்.

சிங்கள சமூகத்தின் உள்முரண்பாடுகள் வெளிப்பட்ட இன்னொரு நிகழ்வு, 1895இல் அநகாரிக தர்மபாலவால் உருவாக்கப்பட்ட மதுவிலக்கு இயக்கமாகும். மக்களிடையே ஏற்பட்ட மதுவிலக்கு இயக்கக் கிளர்ச்சிகள், கொலனிய ஆட்சிக்கு எதிரானவை ஆகவும் சமூக நீதிக்கானவை ஆகவும் அமையவில்லை.

மாறாக அவை, சிங்கள - பௌத்த கண்ணோட்டத்தில் மதத்தை மையப்படுத்திய ஓர் அரசியலை முன்னெடுத்தன. இவை இறுதியில் அநகாரிக தர்மபால முன்னெடுத்த சிங்கள - பௌத்த சிந்தனையை மட்டுமன்றி தர்மபாலவையும் நிராகரித்தது.

இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது, சிங்கள பேரினவாதத்தை அநகாரிக தர்மபாலவின் மரபு என்று அடையாளப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. இரண்டாவது, சிங்கள - பௌத்தம் என்ற இனவாத அரசியல் போக்கின் தொடக்கப்புள்ளியாகவும் அடிப்படையாகவும் அநகாரிக தர்மபால இருக்கிறார் என்பது உறுதியானது.

அவரது, ‘பௌத்த துவேசம்’ கிறிஸ்தவர்களுடன் நிற்கவில்லை. அதேயளவு துவேசத்தை தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகவும் கக்கினார். இதன் முதல் துணை விளைவு கொச்சிக்கடை கலவரம் ஆகும்.

## கடிதங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில்

### வெள்ளரிப்பழச் செய்கை வீழ்ச்சி; விவசாயிகள் கவலை

கோடை காலம் பிறந்து விட்டாலே, கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் வெப்பத்ததைத் தணித்து குளிர்ச்சியாக உடலை வைத்திருக்கவும் வெள்ளரிப்பழங்களை மக்கள் நன்கு விரும்பி உண்கின்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஜூன், ஜூலை காலப்பகுதியில் வெள்ளரிப்பழங்களை பொதுமக்கள் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். பனை ஓலை குடலைகளில் வெள்ளரிப்பழங்களைக் கட்டி, சைக்கிளில் அவற்றைக் கொழுவி, நடமாடும் விற்பனை மூலமாகவும் தெருவோர பெட்டிக்கடைகள் என்பவற்றின் மூலமும் வெள்ளரிப்பழங்கள் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான்குளம் பகுதியில் மாத்திரமே, வெள்ளரிப்பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்பிரதேசத்தில், இம்முறை சுமார் 13 ஏக்கர் நிலப்பரப்பில் வெள்ளரிப்பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக, மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களை விட, இவ்வருடம் வெள்ளரிப்பழச் செய்கை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். பொருளாதார நெருக்கடி, பசளைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு, விலையேற்றம் போன்ற காரணங்களால் இவ்வாறு உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்



# CIPM உடன் SHMA இணைந்து duo திட்டம் முன்னெடுப்பு

ஏபவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட்டின் சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமி (SHMA) அண்மையில், இலங்கையின் மனித வளங்கள் நிபுணர்களை உருவாக்குவதில் பங்காற்றும் நிபுணத்துவ அமைப்பான இலங்கை பிரத்தியேக முகாமைத்துவ பட்டயக் கல்வியகத்துடன் (CIPM) புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. அதன் பிரகாரம், நாட்டின் விருந்தோம்பல் துறையில் duo-blended நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்து வழங்க முன்வந்துள்ளது.

அதிகளவு விசேடத்துவம் வாய்ந்த மனித வளங்கள் கல்வியை முன்னெடுப்பதற்கு CIPM ஸ்ரீ லங்கா ஏற்பாடுகளை மேற்கொள்ளும் முதல் சந்தர்ப்பமாக இது அமைந்திருப்பதுடன், துறைசார் அனுபவத்தையும், ஆழமான அறிவையும் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது. விருந்தோம்பல் துறையில் நாட்டில் அனுபவம் வாய்ந்த திறன் படைத்தவர்களுக்கான தட்டுப்பாடு நிலவும் நிலையில், இந்தப் பங்காண்மை ஏற்படுத்தப்பட்டுள்ளமையானது, உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக அமைந்திருப்பதுடன், தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதில் அதிகரித்த அணுகல், விசேடத்துவம், அறிவை மேம்படுத்தல் போன்றனவும் எய்தப்படும்.




தொழில் பழகும் பருவத்தை வழங்கும் இலங்கையின் முதலாவது விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வியகமாக SHMA திகழ்கின்றது. பயில்வதுடன், வருமானமீட்டல் வழிமுறையைக் கொண்டுள்ள இந்தத் திட்டத்தில் வாரமொன்றில் இரு நாள் பயிலலுக்கு வழங்கப்படுவதுடன், எஞ்சியிருக்கும் நாள்களில் புகழ்பெற்ற நட்சத்திர ஹோட்டல்களில் தொழில் பயிற்சிகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இதனூடாக மாணவர்களுக்கு தமது கற்கைகளைத் தொடர்கையில், தொழில்சார் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், நிறுவனங்களுக்கு தமது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், மீளமைத்துக் கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது.

மாணவர்களுக்கு இந்த duo-சான்றளிக்கப்பட்ட திட்டத்தினூடாக CIPM ஸ்ரீ லங்காவிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்வதுடன், EHL ஹோட்டல் நிபுணத்துவ டிப்ளோமாவின் VET தகைமையையும் பெற முடியும். இந்தக் கற்கை இவ்வாண்டு ஜூலை மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது. உலகின் புகழ்பெற்ற விருந்தோம்பல் முகாமைத்துவ பல்கலைக்கழகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள Ecole hoteliere de Lausanne ஆக ஸ்தாபிக்கப்பட்டுள்ள EHL விருந்தோம்பல் பிஸ்னஸ் ஸ்கூலால் VET தகைமையை வழங்குவதற்கான அங்கிகாரம் பெற்ற அமைப்பாக SHMA திகழ்கின்றது.

தத்தம் துறைகளில் முன்னோடிகளாகத் திகழும் SHMA மற்றும் CIPM ஆகியவற்றினூடாக மாணவர்களுக்கு மற்றும் நிபுணர்களுக்குத் தரமான மற்றும் பிரத்தியேகமான பயிலல் அனுபவம் வழங்கப்படுவதான உறுதியளிப்பு வழங்கப்படுகின்றது. SHMA மற்றும் உலகத் தரம் வாய்ந்த விருந்தோம்பல் கல்வியை வழங்குவதற்கான கீர்த்தி நாமம் என்பதும் குறிப்பிடத்தக்களவு வரவேற்பைப் பெற்றுள்ளது. CIPM ஐச் சேர்ந்த கற்பித்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போர், இந்தக் கல்வியகத்தின் அங்கத்தவர்களாக அமைந்திருப்பதுடன், விருந்தோம்பல் துறையில் பல வருட கால அனுபவத்தையும் கொண்டுள்ளனர்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் பவர் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் பிளாசர், நிதி மற்றும் ஒழுக்கப் பிரிவின் பணிப்பாளர் பவித்ரா சமரசிங்க, SHMA அகடமியின் பீடாதிபதி டேனியலா முனசிங்க மற்றும் முகாமையாளர் சுரீகா பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்றிருந்தனர். CIPM ஸ்ரீ லங்காவை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் கென் விஜயகுமார், உபதலைவர் பிரியந்த ரணசிங்க, பொருளாளர் சமன் ஜயவிக்கிரம, பிரதம நிறைவேற்று அதிகாரி யு.ஏ.சி ஒபேசேகர, நிபுணத்துவ மற்றும் கல்வி விவகார பணிப்பாளர் ஜி. வீரதுங்க, செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் ஹிமாலி தஸநாயக்க மற்றும் இதர சம்மேளன அங்கத்தவர்கள், ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வெலிகடயில் SLT-MOBITEL இன் செயற்பாட்டு தலைமையகம்

SLT-MOBITEL, தனது தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட, உயர் நுட்பத்திறன் படைத்த செயற்பாட்டு தலைமையகத்தை கொழும்பு, வெலிகட பகுதியில் அண்மையில் திறந்துள்ளது.

நவீன உள்ளம்சங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில், நவீன 5G வலயம், மழைநீர் சேகரிப்பு திட்டம், பசுமை வலு, வலு மற்றும் குளிர வைப்பு கட்டமைப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, வலு தரப்படுத்தப்பட்ட கண்ணாடிக் கட்டமைப்பு, வலு தரப்படுத்தப்பட்ட மின் பொருத்துகைகள், மின்னுயர்த்தி, வாயு குளிரூட்டி போன்ற வசதிகள் காணப்படுகின்றன. முதல் கட்டத்தின் கீழ், மொத்தமாக உத்தேசிக்கப்பட்ட 9 மாடிகளில் 5 மாடிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மாடிகள் இரண்டாம் கட்டத்தின் போது நிர்மாணிக்கப்படும். நிலைபேறாண்மை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளை கவனத்தில் கொண்டு, புதிய தலைமையக கட்டட நிர்மாணப் பணிகள் ஏழு ஏக்கர் காணியில் 3% ஆன பகுதியில் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் பகுதிகள் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதிய தலைமையகத்தின் நிர்மாணம் என்பது brown field அபிவிருத்தியாக அமைந்திருப்பதுடன், தகர்க்கப்பட்ட கட்டடங்களிலிருந்து எடுக்கப்பட்ட மூலப்பொருட்கள் அனைத்தும் மீளப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு இருந்ததன் ஊடாக, ஆகக்குறைந்த கழிவு விரயம் உறுதி செய்யப்பட்டிருந்தது.



கட்டட விருத்தியில் சூழலுக்கு நட்பான கொள்கைகள் உள்வாங்கப்பட்டிருந்தன. மேலும், கழிவு நீர் சுத்திகரிப்பு பகுதியில் சுத்திகரிக்கப்படும் நீரைப் பயன்படுத்தி, கட்டடத்தின் செங்குத்து தோட்டச் செய்கையில் பயன்படுத்தப்படும். மேலும், கட்டடத்தின் கூரைப் பகுதியில் 15,000 சதுர அடியில் சூரிய சக்தியில் மின் தயாரிப்பு கட்டமைப்பு நிறுவப்படும்.

புதிய தலைமையகத்தில் புதிய கட்டட முகாமைத்துவ கட்டமைப்புகள் காணப்படுவதுடன், வாயு குளிரூட்டி, நீர், ஒளியூட்டல் மற்றும் இதர வசதிகள் போன்றவற்றை கண்காணிக்க முடிவதுடன், அவை தொடர்பாக, விழிப்புணர்வு ஊட்டக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

நவீன மயப்படுத்தப்பட்ட பணியாற்றல் சூழல் வடிவமைக்கப்பட்டு உள்ளதுடன், பாவனையாளர்களுக்கு நட்பான சூழலில், திறந்த அலுவலக முறைமைகளும் நிறுவப்பட்டுள்ளன. புதிய நிர்மாணத்துடன் சூழலுக்கு ஆகக் குறைந்த தாக்கம் உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், தசாப்த காலம் பழைமை வாய்ந்த மரமும் கட்டடத்துடன் பேணப்பட்டுள்ளது. இதனூடாக, கட்டடத்தின் சூழலில் இயற்கையுடனான உண்மையான பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கட்டம் 1 க்கான மொத்த செயற்றிட்ட செலவு 2,500 மில்லியனாக அமைந்திருந்தது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக, அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்ட பிரயாணக் கட்டுப்பாடுகள், தளம்பல்கள் நிறைந்த அரசியல் சூழல்கள் போன்ற சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேற்படி சவால்கள் நிறைந்த சூழலிலும், SLT-Mobitel அணியால் செயற்றிட்டத்தின் திட்டமிடப்பட்ட பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்திருந்தது.

இந்தப் புதிய கட்டடத்தில் மொபிடெல் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதனூடாக, வருடாந்தம் ரூ. 25.4 மில்லியன் செலவை, சேமித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக வாகனத் தரிப்பிட வாடகைகள், பாதுகாப்பு மற்றும் இதர சேவைகள், மின்சாரம், நீர் பாவனை, அலுவலகங்களுக்கிடையிலான போக்குவரத்து போன்றவற்றினூடாக இந்தச் சேமிப்பை எய்தக்கூடியதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக, ரொட்டுண்டா மற்றும் புரொப்பர்டெக்ஸ் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான வருடாந்த வாடகை சுமார் ரூ. 250 மில்லியன் ரூபாயாக அமைந்துள்ள நிலையில், புதிய தலைமையகத்துக்கு மாறியுள்ளதனூடாக அந்தத் தொகையும் மீதப்படுத்தப்படும்.

சுமார் 60,000 சதுர அடிப் பரப்பில் எஞ்சியிருக்கும் 4 மாடிகளின் நிர்மாணப் பணிகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்பதுடன், அதனூடாக SLT க்கு, SLT-Mobitel இன் செயற்பாடுகளை ஒரே கூரையின் கீழ் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். இதனூடாக, கொழும்பு, கொம்பனித்தெரு போன்ற வியாபார நெரிசல்கள் நிறைந்த பகுதிகளில் பெருமளவு வியாபார பகுதிகளை விடுவிப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்கும் என்பதுடன், SLT-Mobitel க்கு வருமானம் ஈட்டக்கூடியதாகவும் இருக்கும்.





## தாகசாந்தி

நற்பிட்டிமுனை, வேம்படி விநாயகர் கோவிலின் மகா கும்பாபிஷேகத்தின் முதல் நாள் நிகழ்வான எண்ணைய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று (08) வியாழக்கிழமை நடைபெற்றது. அந்தத்தருணம் நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தாகசாந்தி செய்யப்பட்டது.

வி.ரி சகாதேவராஜா





## விவசாய உபகரணங்கள் வழங்கி வைப்பு

நிலைபேறான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அகம் மனிதாபிமான வளநிலையம் (AHRC) ஊடாக விவசாய உபகரணங்கள் கிண்ணியாவில் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த பொருட்களானது கிண்ணியா பிரதேச சபை வளாகத்தில் வைத்து வியாழக்கிழமை (08) வழங்கி வைக்கப்பட்டன.

ஹஸ்பர்



## மன்னாரில் கச்சான்

மன்னார் மாவட்டத்தில் கச்சான் கடலை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 30 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு,அவர்களுக்கு விதை கச்சான் 20 கிலோ கிராம் மெசிடோ நிறுவனம் வைற்றல் திட்ட நிதி அனுசரனையுடன் வழங்கி வைக்கப்பட்டது.,

எஸ்.றொசேரியன் லெம்பேட்







## சமுத்திர தினம்

சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில், வியாழக்கிழமை (08) உலக சமுத்தர தினத்தை ஒட்டி, திருகோணமலை உயர்ந்தபாடு கடற்கரை பிரதேசத்தில், தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டன. சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் வடக்கு, கிழக்கு மாகாண உதவி முகாமையாளர் தி. சிறிபதி தலைமையில் நடைபெற்ற இச்செயற்றிட்டத்தில், திருகோணமலை நகர சபையின் செயலாளர் க. இராஜசேகர், திருகோணமலை மாவட்ட சாரணர் ஆணையாளர் சி. சசிகுமார், இளைஞர் அபிவிருத்தி அகம் திட்ட உத்தியோகத்தர் மதி ஆகியோருடன் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலகர்கள் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர்.

கதிரவன்





## சிரமதானம்

நுவரெலியா லவர்ஸ் சிலிப் பகுதியில் பிளாஸ்டிக், பொலித்தீன் உள்ளிட்ட பல்வேறு திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் புதன்கிழமை (07) முன்னெடுக்கப்பட்டன. நுவரெலியா மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சுற்றாடல் நட்புக் குழுவினர் இணைந்து இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

பி. கேதீஸ்



## பாராட்டு விழா

35 வருட காலம் கல்வி சேவையாற்றிய பட்டிருப்பு வலய ஆரம்பக்கல்வி உதவி கல்வி பணிப்பாளர் பாலசுந்தரம் வரதராஜன், 58 ஆவது வயதில் ஓய்வு பெற்றதையடுத்து அவருக்கு பாராட்டு விழா புதன்கிழமை (07) நடத்தப்பட்டது. அவர் சார்ந்த மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 1991/92 அணியினர் இந்தப் பாராட்டு விழாவை களுவாஞ்சிக்குடியில் விமரிசையாக நடத்தினர்.



வி.ரி சகாதேவராஜா



## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

சமுர்த்தி சிசுபல திட்டத்தின் கீழ், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவு புனானை கிழக்கு 211பி பகுதி மாணவர்களுக்கு, பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (07), அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் என்.எம்.எச் முஹமட் தலைமையில் ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

எச்.எம்.எம் பர்ஸான்



குஜராத்

# 16 ஆயிரம் அறுவை சிகிச்சை: மாரடைப்பால் டொக்டர் மரணம்



தனது பணிக்காலத்தில் 16 ஆயிரம் இருதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்த வைத்தியர், மாரடைப்பால் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம் ஜாம்நகர் பகுதியைச் சேர்ந்தவர் கவுரவ் காந்தி (41). இருதய அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றிவந்தார்.

ஜாம்நகரில் மருத்துவம் பயின்ற இவர், அகமதாபாத்தில் இருதய அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றார்.

திங்கள்கிழமை இரவு நோயாளிகளுக்கு வழக்கம்போல் மருத்துவம் பார்த்துவிட்டு வீடு திரும்பிய அவர், இரவு உணவுக்குப் பிறகு படுத்து தூங்கியுள்ளார். அவர் எழுந்திருக்கவே இல்லை. அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர், மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தினர்.

கேரளா

# எமனான அழைப்பு

வேலை செய்யும் கடையின் மொட்டை மாடியில், அலைபேசியில் பேசியவர் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம், கேரள மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

33 வயதான இவருக்கு திருமணம் முடிந்து குழந்தையும் உள்ளது. எனினும் அவருக்கு தீராத குடிப்பழக்கம் இருந்தது. இதனால் அவரது மனைவி, குழந்தையுடன் அவரை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

இந்நிலையில் தனக்கு வந்த அழைப்புக்கு பதிலளித்துக்கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றார். மாடியின் பக்கச் சுவரில் சிறிது நேரம் இருந்து பேசுவதும், பின்பு அங்குமிங்கும் நடந்து கொண்டே பேசுவதாகவும் இருந்தார். இதில் திடீரென அவர் மொட்டை மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துவிட்டார்.

மும்பை

# 'லிவ் இன் டுகெதர்' குக்கரில் வெந்தது

மும்பையில் தன்னுடன் இணைந்து வாழ்ந்த பெண்ணை கொலை செய்து உடலை இரண்டு துண்டுகளாக வெட்டி அதை சிறு பாகங்களாக துண்டித்து குக்கரில் வேகவைத்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த வீட்டில் 56 வயதான நபரும் 36 வயதான பெண்ணும் லிவ் இன் டுகெதராக வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில் அந்த வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அக்கம்பக்கத்தினர் பொலிஸுக்கு அளித்த புகாரின் பேரில், பொலிஸார் அந்த மாடிவீட்டுக்கு வந்தனர். வீட்டை சோதனை செய்தபோது அங்கே அழுகிய நிலையில் உடல் பாகங்கள் இருந்தமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக இருவரை பொலிஸார் கைது செய்தனர். பெண்ணொருவரும் ஆண்ணொருவரும் லிவ் இன் உறவில் இருந்துள்ளனர்.

இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. இதில் அந்தப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றுமொருவருடன் இணைந்து அப்பெண்ணின் உடலை மர அறுவை இயந்திரம் கொண்டு இரண்டாகத் துண்டித்துள்ளனர். பின்னர் உடலை சிறு பாகங்களாக வெட்டி அதனை குக்கரில் கொஞ்சம் கொஞ்சமாக வேக வைத்துள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது.

இந்தோனேசியா

# முத்தத்தால் அசைந்த கார்: 21 சவுக்கடியால் கசந்தது



இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில், நிறுத்தப்பட்டிருந்த காரொன்று அசைவதைக் கவனித்த பொலிஸார். அக்காருக்கு அருகில் சென்று பார்த்துள்ளனர்.

காருக்குள் 24 வயதான ஆணும், 23 வயதான பெண்ணும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் கொண்டிருப்பதை பொலிஸார் கண்டுள்ளனர்.

இந்தோனேசியாவில் திருமணமாகாத ஆணும் பெண்ணும் நெருக்கமாக இருப்பது சட்டப்படி குற்றம் ஆகும். ஆகவே, காருக்குள் நெருக்கமாக இருந்த அந்த இருவருக்கும் தண்டனையாக 25 சவுக்கடிகள் கொடுப்பது என தீர்ப்பளிக்கப்பட்டது.

தண்டனையை நிறைவேற்றும்போது, வலி பொறுக்கமுடியாமல் அந்தப் பெண் சுருண்டு விழுந்தார். அதைத் தொடர்ந்து, இருவருக்கும் 21 சவுக்கடிகள் கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

இஸ்லாமிய சட்டம் கடுமையாக பின்பற்றப்படும் இந்தோனேசியாவில், மது அருந்துவது, சூதாடுவது, திருமணத்துக்கு முன் நெருக்கமாக இருப்பது போன்ற குற்றங்களுக்கு சவுக்கடி தண்டனையாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

வத்திக்கான்

# போப் பிரான்சிஸுக்கு குடல் அறுவை சிகிச்சை



போப் ஆண்டவர் பிரான்சிஸ்க்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தான் தாங்க முடியாத வலியின் காரணமாக நேற்று திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போப் பிரான்சிஸ்க்கு குடல் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

2021இல் ஜூலை 4ம் திகதி போப் பிரான்சிற்கு குடல் சார்ந்த பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து அவர் பெருங்குடல் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இந்த அறுவை சிகிச்சைக்கு பிறகு ஓய்வு எடுத்த போப் பிரான்சிஸ் அதன்பிறகு தனது பணியை தொடங்கி செய்து வந்தார்.

அதன்பிறகும் கூட திடீரென அவருக்கு அவ்வப்போது உடல் உபாதை ஏற்பட்டு வந்தது. சமீபகாலமாக வயிற்றில் அடிக்கடி தாங்க முடியாத வலி ஏற்பட்டு வந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்ந்தார். மருத்துவமனையில் அவருக்கு மயக்க மருந்து கொடுத்து 3 மணிநேரம் குடல் அறுவை சிகிச்சை நடந்தது. இந்த அறுவை சிகிச்சை பிரச்சினைகள் ஏதுமின்றி வெற்றிக்கரமாக முடிந்தது.

பெய்ஜிங்



# மசூதியை இடிப்பதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு

சீனாவின் யுன்னான் மாகாணம், யுக்சி நகரில் நஜியாயிங் என்ற மசூதி உள்ளது. இது மிகவும் பழைமையானதாகும். இந்த மசூதியில் உள்ள நீல நிற குவிமாடப் பகுதிகளையும், கோபுரங்களையும் (மினார்கள்) இடித்து விட்டு அங்கு புதிய கட்டடங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பான உத்தரவை சீன அரசு, 2020ஆம் ஆண்டு வெளியிட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இதனிடையே மசூதியில் உள்ள குவிமாடப் பகுதிகள் மற்றும் கோபுரங்களை) இடிப்பதற்காக அங்கு புல்டோசர்கள், கிரேன்கள் கொண்டு வரப்பட்டன. இதையறிந்த அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள், அங்கு மிகப்பெரிய அளவிலான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏராளமானோர் அப்பகுதியில் குவிந்து பொலிஸாருக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்பியதால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. மேலும் சீனாவின் இராணுவ வீரர்களும் அங்கு குவிக்கப்பட்டதால் பதற்றம் ஏற்பட்டது. இதனால் மசூதி வளாகத்தில் குவிந்த முஸ்லிம்கள், பொலிஸாருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தாலி

# சபைக்குள் பாலூட்டிய எம்.பி



இத்தாலி பாராளுமன்ற உறுப்பினர் கில்டா ஸ்போர்டியெல்லோ, அந்நாட்டின் பாராளுமன்றத்தில் தாய்ப்பால் ஊட்டிய முதல் அரசியல்வாதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஜனரஞ்சகமான மூவிமென்டோ 5 ஸ்டெல்லின் உறுப்பினரான ஸ்போர்டியெல்லோ, புதன்கிழமை கீழ் சபையில் பொது நிர்வாக வாக்கெடுப்பின் போது, தன்னுடைய இரண்டு மாத மகன் ஃபெடரிகோவுக்கு பாராளுமன்றத்தின் உயர் பெஞ்சில் அமர்ந்திருந்தவாறு தாய்ப்பாலூட்டினார்.

இந்த நிகழ்வு பல நாடுகளில் மிகவும் பொதுவானதாக இருக்கும். ஆனால் பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் இத்தாலியில் இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## 14 – 16ஆம் திகதி வரை உலக சாதனைக்காக

# யாழில் இருந்து காலி வரை நடை பயணம்



ஆ. ரமேஸ்

யாழ்பாணம் தொடக்கம் காலி வரையான 566 கிலோ மீட்டர் தூரத்தை மூன்று நாள்களில், ஓய்வு எடுக்காமல் நடந்து உலக சாதனை நிலைநாட்டுவதற்கு, மலையகத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள், 14.06.2023 முதல் 16.06.2023 வரை நடைபயணத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து தொடங்கவுள்ளனர்.

பொகவந்தலாவை, கொட்டியாக்கலை தோட்டத்தை சேர்ந்த ஆர்.ஏ விக்னேஷ்வரன், தயாபரன் ஆகிய இரட்டை சகோதரர்கள் இந்தச் சாதனைப் பயணத்தை தொடரவுள்ளனர்.

இந்தச் சாதனைப் பயணத்தின் பயிற்சிக்காக ஏற்கெனவே, யாழில் இருந்து காலி வரையிலான 566 கிலோ மீட்டர் தூரத்தை நான்கு நாள்கள் நடந்தும் புத்தளத்திலிருந்து சீதுவை வரையிலான 147 கிலோ மீட்டர் தூரத்தை ஆறு மணி நேரத்திலும் கொழும்பில் இருந்து பொகவந்தலாவை வரையிலான 184 கிலோ மீட்டர் தூரத்தை 18.5 மணித்தியாலங்களிலும் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# முன்னிலையில் அவுஸ்திரேலியா



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியானது ஓவலில் நேற்று முன்தினம் ஆரம்பித்த நிலையில், இந்தியாவுக்கு எதிராக முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

நேற்றைய இரண்டாம் நாள் மதிய நேர இடைவேளையின்போது முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட அவுஸ்திரேலியா தமது முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 422 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ட்ரெவிஸ் ஹெட் 163, ஸ்டீவன் ஸ்மித் 121, டேவிட் வோர்னர் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஷர்துல் தாக்கூர், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

## 103 மில்லியன் யூரோ ஒப்பந்தத்தில்

# பெல்லிங்ஹாமைக் கைச்சாத்திட இணங்கிய மட்ரிட்

ஜேர்மனிய புண்டெஸ்லிகா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் மத்தியகளவீரரான ஜூட் பெல்லிங்ஹாமை 103 மில்லியன் யூரோக்களுக்கு கைச்சாத்திட டொட்டமுண்டுடன் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் இணங்கியுள்ளது.


மட்ரிட்டுடன் 19 வயதான பெல்லிங்ஹாம் ஆறாண்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மட்ரிட் டொட்டமுண்டுக்கு செலுத்தும் 103 மில்லியன் யூரோக்களானது பெறுபேறுகள் தொடர்பான மேலதிக தொகைகளுடன் 133.9 மில்லியன் யூரோக்களை எட்டவுள்ளது.

# மக் அலிஸ்டரைக் கைச்சாத்திட்ட லிவர்பூல்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான பிறைட்டனின் மத்தியகளவீரரான அலெக்ஸிஸ் மக் அலிஸ்டரைக் கைச்சாத்திட்டுள்ளதாக இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் அறிவித்துள்ளது.

லிவர்பூலுடன் ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றில் 24 வயதான மக் அலிஸ்டர் கைச்சாத்திட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# "மியாமிக்குச் செல்கிறேன்" –மெஸ்ஸி

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மியாமில் இணையவுள்ளதாக லியனல் மெஸ்ஸி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் வழங்கப்பட்ட பாரிய ஒப்பந்தத்தைத் தவிர்த்தே குறித்த அறிவிப்பை 35 வயதான மெஸ்ஸி மேற்கொண்டதுடன், நிதி விதிமுறைகள் காரணமாக ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுக்கும் மீளத் திரும்பவில்லை.

# இன்டர் மியாமிக்கு படையெடுக்கும் மெஸ்ஸியின் சகாக்கள்?

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மியாமிக்குச் செல்வதை முன்களவீரரான லியனல் மெஸ்ஸி உறுதிப்படுத்திய நிலையில், அவரது சர்வதேச அணி சகாவான ஏஞ்சல் டி மரியா, அவரது சக முன்னாள் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வீரரான சேர்ஜியோ புஷ்கட்ஸ் ஆகியோரையும் மியாமி கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளது.



இதேவேளை, மெஸ்ஸியின் முன்னாள் பார்சிலோனா சக வீரரான லூயிஸ் சுவாரஸும் பிரேஸிலியக் கழகமான கிறேமியோவிலிருந்து விலகி மியாமியில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 09 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.